தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்.
சென்னை 600 006

# பத்திரிக்கை செய்தி

7.7.2010 அன்று நாளிட்ட ஒரு சில நாளிதழ்களில் சமச்சீர் கல்வித்திட்டத்தின்கீழ் பாடநூல் விற்பனை சார்ந்து வெளிவந்துள்ள செய்திகள் தொடர்பாக பின்வரும் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன:

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் மூலம் சமச்சீர் கல்வித்திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட 1 மற்றும் 6 ஆம் வகுப்பு பாடநூல்கள் தேவைப்பட்டியல் கோரிய 3422 மெட்ரிக்குலேஷன் பள்ளிகளுக்கும் இதர தனியார் பள்ளிகளுக்கும் 2,99,835 மாணவர்களுக்கு முதல் வகுப்பிற்கும் 2,27,068 மாணவர்களுக்கு ஆறாம் வகுப்பிற்கும் அனைத்து பாடநூல்கள் வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் பிற தனியார் நிறுவனங்களிடமிருந்து பிற பாடநூல்கள் வாங்கிய பள்ளிகளுக்கும் தமிழ்பாடநூல்கள் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் முலம் விற்பனை செய்யப்பட்டது. கூடுதல் மாணவர் சேர்க்கை காரணமாக அல்லது மற்ற காரணங்களுக்காக பாடநூல் தேவையுள்ள மெட்ரிக்குலேஷன் பள்ளிகளும் இதர தனியார் பள்ளிகளும் தேவைப்படி தங்களுக்கு அருகாமையில் உள்ள பாடநூல் கழகத்தின் வட்டார அலுவலகங்களை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமச்சீர் கல்வித்திட்டத்தின் கீழ் தரம் வாய்ந்த தாளில் உயர்ந்த அச்சு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பாடநூல்கள் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் மற்றும் இதர தனியார் பள்ளி மாணவர்களுக்கு சென்றடைந்து இத்திட்டத்தின் பலனை அவர்கள் முழுமையாக அடைய வேண்டும் என்ற சீரிய நோக்கத்தின் அடிப்படையில் முதல் வகுப்பிற்கு 4 பாடநூல்கள் (தமிழ், ஆங்கிலம்,

கணிதம் மற்றும் சூழ்நிலையியல்) அடங்கிய செட் ஒன்றின் விலை (Set price) ரு.200/- எனவும் ஆறாம் வகுப்பிற்கு 5 பாடநூல்கள் (தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமுகஅறிவியல்) அடங்கிய செட் ஒன்றின் விலை ரு.250/- எனவும் சலுகை விலையில் நிர்ணயம் செய்யப்பட்டு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

முதல் வகுப்பு பாடநூல்களை தனித்தனியாக வாங்கினால்தான் (Individual copy - Retail sale price) ஒன்றின் விலை ரு.60/- எனவும், ஆறாம் வகுப்பு பாடநூல்களை தனித்தனியாக வாங்கினால் ஒன்றின் விலை ரு.65/- என விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பிற தனியார் நிறுவனத்திடமிருந்து பிற பாடநூல்களை வாங்கும் மெட்ரிக்குலேஷன் உட்பட்ட தனியார் பள்ளிகளும் தமிழ்பாடநூல்களை மட்டும் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்திடமிருந்து வாங்கி வருகின்றனர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்திலிருந்து தான் சமச்சீர் கல்வி திட்ட பாடநூல்களை வாங்க வேண்டும் என்று தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் எந்த ஒரு பள்ளியையும் நிர்ப்பந்தம் செய்யவில்லை. நிர்ப்பந்தம் செய்வதாக கூறவது தவறான தகவல் ஆகும்.

மெட்ரிக் மற்றும் தனியார் பள்ளிகள் தங்களுடைய பாடநூல்களின் தேவை சார்ந்து கோரிக்கைகள் ஏதுமிருப்பின் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் பேக்ஸ் (Fax No.) எண். 044 - 28224493-க்கும் அனுப்பிவைக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாள் - 7.7.2010.

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்.
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்.
சென்னை.